மாலை முரசு

பக்கங்கள் 19

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 புரட்டாதி 02 செவ்வாய்க்கிழமை 19.09.2023 அதிர்வு 50

## உயர்நீதிமன்றத்தை நாடும் சஜித் அணி!

திருத்தம் செய்யப்பட்டு மீள நாடாளுமன்றில் முன்வைக்கப்படவுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்துக்கு எதிராக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, 04

# தியாகி திலீபனை நினைவேந்த கொழும்பில் தடை உத்தரவுகள்!

### இரண்டு நீதிமன்றங்கள் விதிப்பு



கொழும்பில் மருதானை, கோட்டை உள்ளிட்ட மேலும் சில பகுதிகளில் தியாக தீபம் திலீபனை நினைவுகூரும் நிகழ்வுகளை நடத்துவதற்குக் கோட்டை நீதிவான் நீதிமன்றம் இன்று தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேலும் மருதானை பிரதேசத்தில் நினைவேந்தலை நடத்துவதற்கு மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றமும் 04



# கஜேந்திரன் எம்.பி. மீதான தாக்குதல்: முறையான நீதி விசாரணை அவசியம்

### சபையில் சபாநாயகரிடம் கூட்டமைப்பு கோரிக்கை



**திருகோணமலையில் பொலிஸார் முன்னிலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் முறையான நீதி விசாரணை அவசியம் என்று நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

**இன்று காலை ஆரம்பமான நாடாளுமன்ற அமர்வின்போது உரையாற்றிய தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின்வன்னிமாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், இந்தக் கோரிக்கையை விடுத்தார்.** 04

## வத்தளையில் ஆணின் சடலம்



வத்தளை, பள்ளியாவத்தை கடற்கரையில் இனந்தெரியாத ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. 04

## இந்தியாவுடனோ, சீனாவுடனோ கூட்டணி அமைக்காது இலங்கை

### இந்து - பசுபிக் தீவு நாடுகளுக்கிடையிலான பேச்சில் ரணில் தெரிவிப்பு

இலங்கை அரசு இந்தியாவுடனோ அல்லது சீனாவுடனோ கூட்டணி அமைக்காது என்றும், எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கையின் நலன்களை முன்னிலைப்படுத்தி நிற்கும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். 05



## சட்டம் - ஒழுங்கு பாதுகாக்கப்பட வேண்டும் என்கிறார் கிழக்கு ஆளுநர்

(நூருல் ஹுதா உமர்)

நாட்டின் நல்லிணக்கத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஆளுநர் என்ற வகையில் தனக்கு உள்ளது என கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

திருகோணமலை சம்பவம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

"திலீபனின் நினைவேந்தல் ஊர்தி நாடாளுமன்ற உறுப்பினரால் பொலிஸ் அனுமதி இன்றி, சிங்கள மக்கள் வசிக்கும் பிரதேசத்துக்குள் ஊடுருவிக் கொண்டுசெல்லப்பட்டது. இது இனங்களுக்கு இடையேயான நல்லிணக்கத்தை இல்லாமல் ஆக்குகின்றது. 04



# மிகுந்த திறமைசாலியான ஒருவர் ஸஹ்ரான் ஹாசிமை இயக்கினார்

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு முன்னரும் பின்னரும்

## புலனாய்வு பிரிவின் செயற்பாட்டில் சந்தேகங்கள் உள்ளன

### சி.ஐ.டியின் முன்னாள் தலைவர் பரபரப்பு தகவல்



உயிர்த்தஞாயிறு தாக்குதலிற்கு முன்னரும் பின்னரும் புலனாய்வு பிரிவினர் செயற்பட்ட விதம் சந்தேகத்திற்கிடமானதாக காணப்பட்டதாக உயிர்த்தஞாயிறு தாக்குதல் இடம்பெற்ற வேளை குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு பொறுப்பாக இருந்த அதிகாரி சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் ரவி செனிவரட்ண தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றுக்கு திங்கட்கிழமை இரவு வழங்கிய பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

புலனாய்வு அமைப்புகள் மற்றும் புலனாய்வு முகவர்களின் நடவடிக்கைகள் குறித்து பல கேள்விகள் உள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலிற்கு தலைமை வகித்த ஸஹ்ரான் ஹாசிமை கட்டுப்படுத்திய மற்றுமொரு நபர் காணப்பட்டார். அந்த நபர் மிகவும் புத்திசாலி. இலங்கையில் முதலாவது ஒருங்கிணைக்கப்பட்ட தாக்குதலை ஒருங்கிணைக்கும் திறன் அவரிடம் காணப்பட்டது. விடுதலைப் புலிகள் கூட அதனைச் செய்யவில்லை என செனிவரட்ண தெரிவித்துள்ளார்.

ஸஹ்ரான் ஹாசிம் முறையான கல்வியறிவற்ற ஒருவர். அவருக்கு அவ்வாறான ஒருங்கிணைந்த தாக்குதலை மேற்கொள்வதற்கான திறமையிருந்திருக்காது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவருக்கு மேல் யாரோ இருந்தார்கள். மிகவும் திறமையும் பயிற்சியும் அனுபவமும் மிக்க ஒருவர். அவரிடம் ஒருங்கிணைந்த தாக்குதலிற்குப் பலரை ஒருங்கிணைக்கும் திறன் இருந்தது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரச மற்றும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர்களிற்கு ஸஹ்ரான் ஹாசிமை தெரிந்திருந்தது. அவர்கள் அவருடன்இணைந்தும் செயற்பட்டுள்ளனர். தாக்குதலிற்கு முன்னரும், தாக்குதலின் போதும், அதன் பின்னரும் அவர்கள் இணைந்து பணியாற்றியுள்ளனர். எனவும் சி.ஐ.டியின் முன்னாள் தலைமை அதிகாரி பேட்டியில் தெரிவித்துள்ளார்.

வவுணதீவில் இரண்டு பொலிஸார் கொல்லப்பட்டமைக்கு முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களே காரணம் என்ற கருத்தினை உருவாக்குவதற்கு புலனாய்வுப் பிரிவினர் கடுமையாக முயற்சித்தனர். அவர்கள் சில ஆதாரங்களைத் திட்டமிட்டு உருவாக்கினார்கள். இது குறித்து சி.ஐ.டிக்கு பெரும் சந்தேகம் காணப்பட்டது – எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலிற்கும் ஐ.எஸ். அமைப்பிற்கும் தொடர்புள்ளதா எனக் கண்டறிவதற்கான விசாரணைகளை தேசிய புலனாய்வுப் பிரிவின் இன்ஸ்பெக்டர் பண்டார முன்னெடுத்தார். எனினும் இந்த விசாரணைகள் இடைநிறுத்தப்பட்டன. ஐ.எஸ். அமைப்பிடமிருந்து ஸஹ்ரானிற்கு உதவிகள் கிடைத்தன என்பதற்கான ஆதாரங்கள் எதுவுமில்லை.

தேசியப் புலனாய்வு பிரிவின் தற்போதைய தலைவர் சுரேஷ் சலேக்கும் சி.ஐ.டியினருக்கும் சுமுகமான உறவு காணப்படவில்லை. சனல் 4 இன் குற்றச்சாட்டு குறித்து விசாரணைகள் இடம்பெறவேண்டும். – எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இலங்கையை மீளக் கட்டியெழுப்ப தென்கொரியா ஆதரவு வழங்கும்!

## தென்கொரிய ஜனாதிபதி யூன் சுக் யெயோல் தெரிவிப்பு



இலங்கையின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் செயற்திட்டத்துக்கு ஆதரவளிக்கும் என்று தென்கொரிய ஜனாதிபதி யூன் சுக் யெயோல் தெரிவித்தார்.

இலங்கை எதிர்கொண்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டையும் மக்களையும் விடுவிப்பதற்கான ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வேலைத் திட்டத்தை தென்கொரிய ஜனாதிபதி பாராட்டினார். அத்துடன் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அர்ப்பணிப்பையும் பாராட்டினார்.

எதிர்காலத்தில் இலங்கை இளைஞர் யுவதிகளுக்கு தென்கொரியாவில் பல புதிய தொழில் வாய்ப்புகள் உருவாக்க எதிர்பார்க்கப்படுவதாகவும், காலநிலை மாற்றத்தை குறைப்பது தொடர்பான ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் இடையில் விரைவில் கைச்சாத்திட எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத் தொடருடன் இணைந்ததாக, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் தென்கொரிய ஜனாதிபதி யூன் சுக் யெயோல் ஆகியோருக்கு இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்று (18) நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகளுக்கான தென் கொரிய நிரந்தர வதிவிட தூதுக்குழு அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது தென்கொரிய ஜனாதியால் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது. சிநேகபூர்வ கலந்துரையாடலின் பின்னர் இரு தலைவருகளுக்கும் இடையில் உத்தியோக பூர்வ கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

1978 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை தென்கொரியாவுக்கு இடையிலான இராஜதந்திர உறவுகள் தொடர்ச்சியாக முன் கொண்டுச் செல்லப்பட வேண்டும் என்று இணக்கப்பாடு காணப்பட்டது.

இலங்கை மற்றும் தென்கொரியாவுக்கு இடையில் வர்த்தக மற்றும் முதலீட்டு தொடர்புகளை பலப்படுத்திக்கொள்வது தொடர்பில் இரு தலைவர்களும் விசேட அவதானம் செலுத்தினர். விரைவில் இரு நாடுகளுக்குமிடையில் வர்த்தக ஒப்பந்தத்தை கைசாத்திட வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வலியுறுத்தினார்.

தற்போதும் இலங்கையின் இளைஞர், யுவதிகள் பெரும் எண்ணிக்கையில் தென்கொரியாவில் தொழில் புரிகின்றனர். அந்நாட்டு பொருளாதார வளர்ச்சிக்கும் பெரும் பங்களிப்பை வழங்கி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேபோல் தென்கொரிய சேவைக் காலத்தின் பின்னர் தொழில் திறன் மிக்கவர்களாகவே அவர்கள் இலங்கை திரும்புவதாகவும், அதனால் அவர்களால் இலங்கையின் பொருளாதாரத்துக்கு உயர் பங்களிப்பு கிடைக்கும் எனவும் தென்கொரிய ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இதன்போது காலநிலை மாற்றங்களை மட்டுப்படுத்திக்கொள்வது தொடர்பில் இலங்கை ஜனாதிபதியின் அர்ப்பணிப்புக்கும் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

இரு நாடுகளுக்கும் இடையிலான காலநிலை மாற்றம் குறித்த ஒப்பந்தத்தை விரைவில் கைசாத்திட எதிர்பார்த்திருப்பதாகவும், காலநிலை மாற்றங்களுக்கு முகம்கொடுப்பது தொடர்பில் இலங்கையுடன் நெருக்கமாக செயற்பட எதிர்பார்த்திருப்பதாகவும் தென்கொரிய ஜனாதிபதி யூன் சுக் யெயோல் சுட்டிக் காட்டினார்.

அதேபோல் இலங்கையின் டிஜிட்டல் மயமாக்கல் வேலைத்திட்டம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க விளக்கமளித்திருந்தார். அதேநேரம், டிஜிட்டல் மயமாக்கலில் ஆச்சர்யமாக விளங்கும் தென்கொரியாவை முன்னுதாரணமாக கொள்ள முடியும் என தென்கொரிய ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இதன்போது, விரைவில் தென்கொரியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளுமாறும் தென்கொரிய ஜனாதிபதி யூன் சுக் யெயோல் , ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு அழைப்பு விடுத்தார்.

# உணவில் பிளாஸ்ரிக் முட்டை! சுகாதாரப் பிரிவில் முறைப்பாடு!!

களுத்துறை அளுத்கம பகுதியில் உள்ள பிரபல உணவகம் ஒன்றில் கொள்வனவு செய்யப்பட்ட உணவில் பிளாஸ்டிக் தன்மை கொண்ட முட்டை இருந்தது என்று ஒருவர் முறைப்பாடு ஒன்று பதிவு செய்துள்ளார்.

முறைப்பாடானது அளுத்கம சுகாதார பரிசோதகரிடம் கிடைக்கப்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அளுத்கம, களுவாமோதர பிரதேசத்தில் வசிக்கும் ஒருவரே முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாடு செய்த வாடிக்கையாளர் கூறுகையில்,

அளுத்கம பிரதேசத்தில் உள்ள உணவகத்துக்குச் சென்று 1230 ரூபாவுக்கு முட்டை ரோல், பணிஸ், மீன் ரோல் போன்ற சிற்றுண்டிகளை வாங்கினேன். இதன்போது கொள்முதல் செய்யப்பட்ட ரோல்ஸில் முட்டை போன்ற வெள்ளை நிற இறப்பர் பொருள் இருந்தது என்று தெரிவித்துள்ளார்.

அவருடைய முறைப்பாட்டை அடுத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று சுகாதார பரிசோதகர் குறிப்பிட்டுள்ளார்.

# நீர் தேங்கியிருந்த 16 அடி குழியில் விழுந்தனர் தந்தையும் மகளும்!

## பிரதேசவாசிகளால் மீட்பு

கொத்தடுவை நீர் வழங்கல் சபைக்கு அருகாமையில் இன்று (19) காலை பாடசாலைக்கு சென்று கொண்டிருந்த தந்தையும் மகளும் நீர் தேங்கியிருந்த குழியொன்றில் விழுந்து விபத்துக்கு ஆளாகினர்.

அவர்கள் சுமார் 16 அடி ஆழமுள்ள குழியிலேயே இவ்வாறு விழுந்துள்ளனர் என்று தெரிவிக்கப் படுகிறது. தந்தையும் மகளும் உடனடியாகவே மீட்கப்பட்டனர். பிரதேசவாசிகளே இருவரையும் காப்பாற்றியுள்ளனர். மோட்டார் சைக்கிளில் பாடசாலைக்கு சென்று கொண்டிருந்த போதே இந்த அனர்த்தம் இடம்பெற் றுள்ளது.

குடி தண்ணீர் குழாய் உடைந்ததன் காரணமாக இவ்வாறு பாரிய குழி ஏற்பட்டுள்ளது என்றும் அப்பகுதியில் நீர் விநியோகம் தடைப்பட்டுள்ளது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மீண்டும் பாடசாலை சென்றார் வைசாலி

## பூங்கொத்து வழங்கி வரவேற்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் போதான வைத்தியசாலையின் மருத்துவர்கள், தாதிகள் ஆகியோரின் அசண்டையீனம் மற்றும் கவனக்குறைவால் தனது இடது கையை இழந்த யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மாணவியான சாண்டில்யன் வைசாலி இன்று தனது கற்றலைத் தொடர்வதற்காகப் பாடசாலைக்குச் சமூகமளித்தார்.

இவரைப் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், சக மாணவர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர் சுகிர்தன் ஆகியோர் பூங்கொத்து வழங்கி வரவேற்றார்கள்.

வைசாலி கற்றலைத் தொடர்வதற்கும் அவர் பாடசாலைச் சமூகத்துடன் மீண்டும் ஒன்றித்து வாழ்வதற்கான அனைத்துவிதமான ஊக்கத்தையும் வழங்குவதாக பாடசாலைச் சமூத்தினர் இதன் போது உறுதியளித்தனர்.



## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### தியாகி திலீபனை...

தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

கோட்டை மற்றும் மருதானை பொலிஸார் நீதிமன்றங்களில் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

'ஒடுக்கப்படும் தமிழ் மக்களோடு நிற்போம்' என்ற கோஷத்துடன் கிறிஸ்தவ ஒத்துழைப்பு இயக்கத்தால் இன்று பிற்பகல் 3 மணிக்கு மருதானையில் அமைந்துள்ள சமய, சமூக நடு நிலையத்தில் திலீபன் நினைவேந்தல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஏற்கனவே கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை நோக்கிப் பயணித்த தியாகி திலீபனின் நினைவு ஊர்தி மீதும், அந்த ஊர்தியில் பயணித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மீதும் சர்தாபுர பகுதியில் வைத்து சிலரால் தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் கடும் கண்டனங்களுக்கு உள்ளாகியிருந்தது.

இவ்வாறானதொரு பின்னணியில் இன்றைய தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நினைவேந்தல் நிகழ்வைக் குழப்பும் வகையில் 'முதுகெலும்பு இருப்பவர்கள் ஆயத்தமாகுங்கள். கொழும்புக்கு வருகைதரும் புலிகளுக்கு எதிராகத் தாக்குதல் நடத்துவோம்' என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதிவுகள் பேஸ்புக், ருவிட்டர் உள்ளிட்ட சமூக வலைத்தளப் பக்கங்களில் அதிகளவில் பகிரப்பட்டன.

அதனையடுத்து திலீபன் நினைவேந்தல் நிகழ்வு தொடர்பில் விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல் காரணமாகவும், வன்முறைத் தாக்குதல்கள் மற்றும் அநாவசியமான குழப்பங்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்கிலும் இன்று மாலை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த நினைவேந்தல் நிகழ்வை இரத்துச் செய்வதாக கிறிஸ்தவ ஒத்துழைப்பு இயக்கம் இன்று காலை அறிவித்தது.

இது இவ்வாறிருக்க பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை அடுத்து கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் மருதானை, கோட்டை உள்ளிட்ட மேலும் சில பகுதிகளில் தியாகி திலீபனை நினைவுகூரும் நிகழ்வுகளை நடத்துவதற்குத் தடை விதித்து உத்தரவு பிறப்பித்தது.

---

### கஜேந்திரன் எம்.பி....

"சக நாடாளுமன்ற உறுப்பினரான உத்திக பிரேமரத்ன துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திலிருந்து உயிர் தப்பியுள்ளார். அதேவேளை, திருகோணமலையில் சக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தாக்கப்பட்டு உயிர் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளார். இவ்விரு சம்பவங்கள் தொடர்பாக முறையான நீதி விசாரணை மேற்கொள்ளப்பட்ட வேண்டும் என்று சபாநாயகரிடம் கோரிக்கை விடுக்கின்றேன்" – என்று செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. மேலும் கூறினார்.

---

### உயர்நீதிமன்றத்தை...

உயர் நீதிமன்றத்தை நாடவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சட்டமூலத்தில் எவ்வாறானதிருத்தங்கள்முன்வைக்கப்பட்டாலும், அதற்குத் தமது தரப்பு எதிர்ப்பை வெளியிடும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க தெரிவித்துள்ளார்.

### வத்தளையில்...

கடற்கரையில் நேற்று மாலை சடலமொன்று கரையொதுங்கியுள்ளது எனக் கிடைத்த தகவலின் அடிப்படையில் வத்தளை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர். உயிரிழந்தவர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் 65 முதல் 70 வயதுக்குட்பட்ட 5 அடி 5 அங்குல உயரத்துடனும், மெலிதான உடலுடனும், மஞ்சள் நிற அரை கைச்சட்டையுடனும், சாம்பல் நீளமான காற்சட்டையுடனும், வெள்ளை முடியுடன் காணப்படுகின்றார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

சடலம் ராகம வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. வத்தளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

---

### சட்டம் - ஒழுங்கு...

தற்போது நாட்டில் காணப்படும் பொருளாதார நெருக்கடியான சூழ்நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் அதி கவனத்துடன் செயற்படக்கூடிய பொறுப்பு உள்ளது.

அப்பொறுப்பில் அவதானக் குறைவாகச் செயற்படுவது நாட்டின் நல்லிணக்கத்தைச் சீர்குலைப்பதுடன், சட்டம், ஒழுங்கும் பாதிப்படைகின்றது.

எதிர்காலத்தில் நாட்டின் நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் இப்படியான செயற்பாட்டைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

திருகோணமலை சம்பவம் தொடர்பில் உரிய விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்குப் பணிப்புரை விடுத்துள்ளேன்."
– என்றார்.

## இந்தியாவுடனோ...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

இந்து – பசுபிக் பிராந்தியத்தில் பெரும் வல்லரசுப் போட்டி நிலவிய போதிலும், இந்து சமுத்திரம் மற்றும் தென் பசுபிக் சமுத்திர தீவு நாடுகளின் சுதந்திரம், அவற்றின் உள்ளக விவகாரங்களில் தலையிடாமை மற்றும் அவர்களின் தனிப்பட்ட உரிமைகளைப் பாதுகாப்பதற்காக பிராந்தியத்தின் அனைத்து நாடுகளும் அர்ப்பணிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத்தொடருடன் இணைந்ததாக நியூயோர்க் நகரில் நேற்று நடைபெற்ற கடல்சார் நாடுகளுக்கான 3 ஆவது இந்து – பசுபிக் தீவு நாடுகளுக்கு இடையிலான பேச்சில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

கார்னகி எண்டோவ்மென்ட் மற்றும் சசகாவா மன்றம் ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தக் கலந்துரையாடலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதான உரை நிகழ்த்தியதோடு, சர்வதேச அமைதிக்கான கார்னகி எண்டோவ்மென்ட் இன் கொள்கை ஆராய்ச்சி தொடர்பான சிரேஷ்ட உப தலைவர் டென் பெயரினால் இது நெறிப்படுத்தப்பட்டது.

பிரதான உலக வல்லரசுகளுக்கு இடையிலான போட்டியில் தலையிடுவதற்கு, இந்து சமுத்திர மற்றும் தென் பசுபிக் பிராந்தியத்தின் தீவு நாடுகள் விரும்பவில்லை என்றும், இந்த நாடுகள் தமது சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாடு உட்பட அவர்களின் முதன்மையான விடயங்களில் கவனம் செலுத்தி, தமது நாடுகளின் இறைமை மற்றும் சுதந்திரத்தைப் பேண முயற்சிப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மேலும், இலங்கை அரசு இந்தியாவுடனோ அல்லது சீனாவுடனோ கூட்டணி அமைக்காது என்றும், எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கையின் நலன்களை முன்னிலைப்படுத்தி நிற்கும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அதேபோன்று, பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளும் தமது நாடுகளின் இறைமைக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் மற்றும் அவுஸ்திரேலியா உள்ளடக்கிய க்வொட் நாடுகள் மற்றும், சீனாவின் இலக்குகளுடன் தொடர்பில்லாத இந்து சமுத்திரத்தின் மற்றும் தென் பசுபிக் பிராந்தியத்தின் தீவு நாடுகள் தமது சொந்த முன்னுரிமைகளைக் கொண்டிருப்பதாகவும், அவற்றை மதிக்கத் தயாராக இருக்கும் எந்தவொரு தரப்பினருடனும் ஒத்துழைப்பைக் கட்டியெழுப்ப இலங்கையும் செயற்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சீனாவின் எழுச்சியானது பிராந்திய கட்டமைப்புக்குள்ளேயே நடந்தது எனவும், அதனைப் பல நாடுகள் ஏற்றுக்கொள்வதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

அண்மைக்காலமாக இந்தக் கட்டமைப்புக்கு அப்பால் மாபெரும் வல்லரசுப் போட்டி விரிவடைந்து வருவதால் உறுப்பு நாடுகள் மத்தியில் கவலை தோன்றியுள்ளது எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

தெற்கு பசுபிக் சமுத்திரம் மற்றும் இந்து சமுத்திரம் ஆகியவை, பெரும் மூலோபாய மதிப்பைக் கொண்டிருப்பதாகச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, தெற்கு பசுபிக் பிராந்தியம் அமெரிக்க கடற்படைக்கு இன்றியமையாத கேந்திர மையமாகும் என்றும், இரண்டாம் உலகப் போர் காலத்தின் போது இந்து சமுத்திரம் முக்கிய பங்காற்றியது என்றும் தெரிவித்தார்.

பவளக் கடல் மற்றும் மிட்வே போரின் போதும் இரண்டாம் உலகப் போரின் போதும் அமெரிக்கா தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்தியதும் மற்றும் அட்மிரல் யமமோட்டோவின் விமானத்தை சுட்டு வீழ்த்தியதும் ஹவாய் உட்பட இந்த தென் பசுபிக் பிராந்தியத்தில் தான் என்பதை ஜனாதிபதி நினைவு கூர்ந்தார்.

இந்து சமுத்திரத்தில் இலங்கையின் முக்கியத்துவத்தை இதன்போது விளக்குவதற்காக, வின்ஸ்டன் சர்ச்சிலின் அறிக்கையை மேற்கோள் காட்டிய ஜனாதிபதி, “இலங்கையை கைப்பற்றுவது என்பது இந்து சமுத்திரத்தில் அதிகாரத்தை இழப்பதாகும்” என்றும் குறிப்பிட்டார்.

இந்து – பசுபிக் பிராந்தியத்தின் முக்கியத்துவம், குறிப்பாக சீனாவின் சவால்களால் எடுத்துக்காட்டப்படுவதாகச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இது பிராந்திய இயக்கம் மற்றும் ஒத்துழைப்பை மீள் மதிப்பீடு செய்ய தூண்டியுள்ளது என்றும் தெரிவித்தார்.

ஐரோப்பிய சக்திகள் மற்றும் நேட்டோவை தொடர்புபடுத்துவதற்காக ஜி – 7 குழு எடுக்கும் முயற்சிக்கு எதிர்ப்பு எழுந்ததுடன், பிரான்ஸ் மட்டுமே அதற்கு ஆதரவளித்தது என்றும், இந்த சம்பவம் இந்து சமுத்திர ரிம் சங்கத்தின் விதிகளை மீறுவதாகக் கருதப்படுவதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இந்து சமுத்திரத்தின் மேற்பரப்புப் போர் அச்சுறுத்தல்களைக் குறைக்கும் வகையில் நீர்மூழ்கிக் கப்பல் போர் அச்சுறுத்தல்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு இந்து சமுத்திர ரிம் சங்கத்திற்குள் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

தீவு நாடுகள் தொடர்பிலான பாதுகாப்பு உரையாடல்களை ஏற்றுக்கொள்ள முடியும் என்றாலும், அந்த நாடுகளின் உள்ளக விவகாரங்களில் தலையிடுவது பொருத்தமானதல்ல எனவும் ஜனாதிபதி மேலும் சுட்டிக்காட்டினார்.

இலங்கை உட்பட பல தீவு நாடுகள் இந்து – பசுபிக் பிராந்தியம் தொடர்பில் உயர்மட்ட கலந்துரையாடல்களில் ஈடுபடவில்லை என குறிப்பிட்ட ஜனாதிபதி, அமெரிக்கா மாலைதீவில் தூதரகமொன்றைத் திறப்பது போன்ற அண்மைக் கால முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இங்கு, அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அம்பாந்தோட்டை வர்த்தகத் துறைமுகத்தை சீனா இராணுவத் தளமாக முத்திரை குத்துவது தொடர்பில் இலங்கை கவலையடைவதாகத் தெரிவித்தார்.

இந்தியாவுடன் இணைந்து திருகோணமலைத் துறைமுகத்தை இலங்கை அபிவிருத்தி செய்து வருவதாகவும், சர்வதேச அரங்கில் இந்த விடயத்தை முன்வைக்க விரும்புவதாகவும் ஜனாதிபதி கூறினார்.

இந்திய மற்றும் பசுபிக் சமுத்திரங்களுக்கு இடையேயான தொடர்பை இனங்கண்டு, இரு பிராந்தியங்களின் சிறிய தீவு நாடுகளுக்கிடையில் செயலூக்கமான ஒத்துழைப்பை வலியுறுத்திய ஜனாதிபதி, 'இந்து – பசுபிக்' கருத்தியலுக்கு இந்து சமுத்திர ரிம் சங்கத்தின் தேவை அதிகளவில் இருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

இந்து – பசுபிக் பிராந்தியத்தில் பெரும் வல்லரசுப் போட்டி நிலவிய போதிலும், இந்து சமுத்திரம் மற்றும் தென் பசுபிக் பிராந்தியத்தில் தீவு நாடுகளின் சுதந்திரம், அவற்றின் உள்ளக விவகாரங்களில் தலையிடாமை, அவர்களின் தனிப்பட்ட முன்னுரிமைகளின் பாதுகாப்பதற்காக பிராந்தியத்தின் அனைத்து நாடுகளும் அர்ப்பணிப்புடன் இருக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி மேலும் சுட்டிக் காட்டினார்.





# நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## விலகாத பயங்கரவாதச் சட்டம்

கடந்த 45 வருடங்களாக இந்நாட்டில் நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டம் மனித நாகரிகப் பண்பியல்புகளுக்கே ஒவ்வாத கொடுங்கோன்மைச் செயற்பாடு என்பது உலகத்தின் கணிப்பீடு. இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரை அதனை வெளிப்படையாக ஒப்புக்கொண்டு, அந்தச் சட்டத்தை விலக்குவது அவசியம் என்பதை பகிரங்கமாகவே அறிவித்திருக்கின்றார்கள்.

ஆனால் அதனை விலக்கும் நடவடிக்கைதான் ஒப்பேறுவதாக இல்லை. 1978 இல் தற்காலிக ஏற்பாடுகள் சட்டமாகக் கொண்டுவரப்பட்டது, 45 ஆண்டுகள் தாண்டியும் நிரந்தரச் சட்டமாகத் தொடர்வதுதான் நாட்டின் துரதிர்ஷ்டம்.

பல நூறு அப்பாவித் தமிழர்களின் வாழ்வைப் பல்லாண்டு காலம் நான்கு சுவர்களுள் சிதைத்தழித்த இந்தக் கொடூரச் சட்டத்தை இலங்கை ஆட்சிப் பீடங்கள் கைவிட மறுத்து இழுத்தடிக்கின்றன.

2007 இல் இழந்த ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை 2017இல் மீண்டும் பெறுவதற்காக இந்தச் சட்டத்தை அடியோடு மாற்றி அமைப்போம் என்று சர்வதேச சமூகத்துக்கு இலங்கை அரசு வாக்குக் கொடுத்து உறுதி அளித்தது. ஆறு ஆண்டுகள் கடந்தும் அது இன்னும் நடக்கவேயில்லை.

இச்சட்டத்தை மாற்றி அமைக்கிறோம் என்ற பெயரில் சில கண்துடைப்பு நாடகங்கள் காலத்துக்கு காலம் அரங்கேற்றப்பட்டன. நியாயபூர்வமான - அர்த்த புஷ்டியான - எந்த நகர்வும் முன்னெடுக்கப்படவில்லை.

அந்தக் கண்துடைப்பு நாடகங்களின் வரிசையில் மற்றொரு அங்கம் இப்போது அரங்கேறுகின்றது.

தற்போதைய பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு மாற்றாக, புதிதாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கொண்டுவரப்படுகின்றது என்று திரும்பவும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. தற்போதுள்ள சட்டத்தின் கொடூரப் பக்கங்கள் புதிய சட்டத்தின் மூலம் மாற்றப்படும் என்பது இலங்கை அரசின் பிரகடனமாகவும் நிலைப்பாடாகவும் முன்வைக்கப்படுகின்றது.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் திருத்தப்பட்ட வடிவம் இப்போது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது.

திருத்தப்பட்ட இப்போதைய வடிவத்திலும் 'பயங்கரவாதம்' என்ற சொல்லுக்கான அர்த்தம் மிகைப்படுத்தப்பட்டுள்ளது என்றும், அதன் மூலம் சாதாரண விடயங்களையும் பயங்கரவாதமாக்கி அப்பாவிகளை மாட்ட வைக்கும் தந்திரம் முன்னெடுக்கப்படுகின்றது என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

குற்றச்சாட்டுகளை சுமத்தாமலேயே தடுப்புக் காவலை நீடித்தல் மிக மோசமான ஏற்பாடு என்று விமர்சிக்கப்படுகிறது.

நீதித்துறை மற்றும் மனித உரிமைகளுக்கு தீங்கு விளைவிக்கும் அளவிற்கு இந்த உத்தேச புதிய சட்டமூலத்தின் மூலமாக ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்று மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் விமர்சித்துள்ளது.

அறகலய போராட்டம் மூலம் பொறுப்பு கூறல், ஆட்சி முறை மாற்றங்கள் போன்றவற்றுக்கு மக்கள் குரல் எழுப்பி உள்ளனர். ஆனால் அமைப்புகளைக் கட்டுப்படுத்துதல், அதிகாரங்களைக் கட்டுப்படுத்துவதற்கான உத்தரவுகளை வெளியிடுதல் போன்றவை மூலம் ஜனாதிபதியின் அதிகாரப் பிடியை மேலும் உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை உத்தேச புதிய சட்டமூலமும் முன் வைப்பதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

ஆகவே பயங்கரவாதத் தடைச் சட்டம், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமாக மாறுவது 'சட்டியில் இருந்து அடுப்பில் விழுந்த கதை'யாகத்தான் போய் முடியப் போகிறது போலும்...!

# உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தால் ஜனாதிபதி அதிகாரங்களை விரிவாக்க முயற்சி

### மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் சுட்டிக்காட்டு

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் என்பது ஜனாதிபதியின் அதிகாரங்களை விரிவாக்குவதற்கான ஒரு முயற்சி என்று மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தெரிவித்துள்ளது.

செப்ரெம்பர் 15 ஆம் திகதி அன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்ட உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தின் திருத்தப்பட்ட சட்டமூலத்தை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கவனத்தில் எடுத்துள்ளது.

சட்டமூலத்தின் முன்னைய பதிப்பு 2023 மார்ச் மாதம் 22 ஆம் திகதி வெளியானது.

சட்டமூலத்தின் முன்னைய வடிவம் குறித்து பல கரி சனைகளை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் வெளியிட்டிருந்தது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு–

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தின் ஆரம்ப வடிவத்தில் பலமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் சுட்டிக்காட்ட விரும்புகின்றது.

தண்டனையில் ஒன்றாக மரண தண்டனை நீக்கப்பட் டமை தடுப்பு உத்தரவு தொடர்பில் மாற்றங்கள் செய்யப் பட்டமை போன்றவற்றை சுட்டிக்காட்டலாம்.

இரண்டு மாதங்களுக்குத் தடுப்பு உத்தரவை வழங்குவ தற்கான அதிகாரம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.

எனினும் திருத்தப்பட்ட சட்டமூலத்தில் பயங்கரவாதம் என்றால் என்பதை மிகைப்படுத்துதல் பயங்கரவாதத்துக்கான குற்றங்களை மிகைப்படுத்துதல் போன்ற சிக்கலான விடயங்கள் தொடர்ந்தும் காணப்படுகின்றன.

உத்தேச சட்டமூலத்தில் குற்றச்சாட்டுகளை சுமத்தாமலே நீடிக்கப்பட்ட தடுப்புக் காலங்கள், விளக்கமறியலை நீடித்தல் போன்றன காணப்படுகின்றன.

நீதித்துறை மற்றும் மனித உரிமைகளுக்குத் தீங்கு விளைவிக்கும் அளவுக்கு ஜனாதிபதிக்கு அதிகளவு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இராணுவமயமாக்கலை தீவிரப்படுத்தும் விதத்திலும் உத்தேச சட்டமூலம் காணப்படுகின்றது.

குறிப்பாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஊரடங்கு தொடர்பான உத்தரவுகள் தொடர்பில் அதிக கரிசனை கொண்டுள்ளது. அவை வெளிப்படையாக ஜன நாயகத்துக்கு முரணானவை. ஜனாதிபதியின் அதிகாரத்தை விரிவாக்க முயல்கின்றன.

2022 இல் அரகலய மூலம் ஜனாதிபதி பதவியை நீக்க வேண்டும் என மக்கள் விடுத்த வேண்டுகோளுக்கு மாறாக உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் என்பது ஜனாதிபதியின் அதிகாரங்களை விரிவாக்குவதற்கான ஒரு முயற்சி என மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் சுட்டிக்காட்ட விரும்புகின்றது.

அதிகளவு அரசியல் பொறுப்புக் கூறல் ஆட்சி முறையில் மாற்றம் போன்றவற்றுக்கான வேண்டுகோள்கள் வெளி யாகியுள்ள போதிலும் அமைப்புகளைத் தடைசெய்வதற்கான அதிகாரங்கள் – கட்டுப்படுத்துவதற்கான உத்தரவுகளை வெளியிடுவதற்கான அதிகாரங்கள் போன்றவை மூலம் உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் ஜனாதிபதியின் அதிகாரங்களை மேலும் வலுப்படுத்துகின்றது.– என்றுள்ளது.

# ஐக்கிய நாடுகள் சபையின் மீது தமிழருக்கு நம்பிக்கை குறைகிறது

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. சுட்டிக்காட்டு

ஐக்கிய நாடுகள் சபையின் மீதான நம்பிக்கை தமிழ் மக்களுக்குக் குறைந்து வருகிறது என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னார் ரெலோ கட்சியின் அலுவலகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

ஐக்கிய நாடுகள் சபை வலுவான அல்லது ஆக்க பூர்வமான தீர்மானங்களைக் கொண்டுவந்து இந்த ஸ்ரீ லங்கா அரசின் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு மனித உரிமை மீறல்களுடன் சம்மந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்பதும் எமது மக்களின் கோரிக்கையாகவும் ஆவலாகவும் உள்ளது.

ஆனாலும் ஐ.நா. சபையில் தீர்மானங்கள் வருகின்ற போதேல்லாம் ஸ்ரீ லங்கா அரசு ஐ.நா. சபையை ஏமாற்றுகின்ற வகையிலே காலங்கள் கொடுக்கப்படாலும் அவற்றை நடைமுறைப்படுத்தாது தொடர்ந்தும் கால நீடிப்பைப்



பெறுவதற்கான உத்திகளை கையாண்டு வருகின்றது.

அதற்கேற்ற வகையில் ஐ.நா. சபையும் அவர்களுக்கு வாய்பை வழங்கும் விதமாகவே நடந்து கொள்கின்றார்கள்.

எனவே தொடர்சியாக ஐக்கிய நாடுகள் சபை அறிக்கைகளை வெளியிடுவதை நிறுத்தி விட்டு அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும்.

அதே நேரம் இந்தியாவும் இலங்கையில் 13 ஆவது திருத்த சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு தெரிவித்துள்ளது.

ஆனாலும் ஸ்ரீ லங்கா அரசு இதை நடைமுறைப்படுத்துவதை விடுத்துச் சர்வதேசத்தை ஏமாற்றும் விதத்தில் செயற்படுகிறது. ஐக்கிய நாடுகள் சபையில் நேரடியாக சாட்சியம் வழங்கும் காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள், மற்றும் காணி ஆக்கிரமிப்பு, மனித உரிமை மீறல் விடயங்கள் தொடர்பான சாட்சியங்களை வலுவற்றதாக மாற்றும் விதத்தில் ஐ. நாவை ஏமாற்றி வருகின்றது.

ஐக்கிய நாடுகள் சபை இலங்கைக்கு எதிராக காட்டமான அற்றிக்கைகளை வெளியிடும் போது தமிழ் மக்களுக்கு ஆறுதலாக இருந்தாலும் அவை நடைமுறைபடுத்தப்படாத பொழுது அவர்கள் ஏமாற்றம் அடைக்கின்றனர்.

எனவே இந்த நிலை மாற வேண்டும் என்றால் ஐக்கிய நாடுகள் சபை சர்வதேச நீதி மன்றத்தில் இலங்கையில் மனித உரிமை மீறல்களை மேற்கொண்டவர்களை நிறுத்த வேண்டும். தமிழ் மக்களின் நியாயமான தீர்வுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் – என்றார்.

# யாழ். ஆஸ்பத்திரிகளில் கவனவீர்ப்புப் போராட்டம்

## நாளை முதல் இரண்டு நாள்கள் நடத்த ஏற்பாடு

யாழ்.மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் கவனவீர்ப்புப் போராட்டங்களை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் நாளை (20) மற்றும் நாளை மறுதினம் (21) ஆகிய இரு தினங்களும் கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் வி. தர்சன் இதனை அறிவித்துள்ளார்.

வைத்தியசாலைகளில் நிலவும் மருந்துத் தட்டுப்பாடு மற்றும் வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறுவது சுகாதார கட்டமைப்பை பாதிக்கும்.

எனவே அதனை தடுக்க அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்தே இப்போராட்டத்தை முன்னெடுக்க உள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# வெளிநாட்டு சிகரெட்டுக்களை கொண்டுவந்த இருவர் கைது!

வெளிநாட்டு சிகரெட்டுக்களை இலங்கைக்குச் சட்டவிரோதமாகக் கொண்டு வந்த இரு வர்த்தகர்களைக் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகள் நேற்று (18) திங்கட்கிழமை கைது செய்துள்ளனர்.

சுமார் 45 லட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியாக 45, 400 வெளிநாட்டு சிகரெட்டுக்களைச் சுங்க அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவர் யட்டியாந்தோட்டையைச் சேர்ந்த பெண்ணும் மற்றையவர் கல்முனையைச் சேர்ந்த ஆணும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவர்கள் இருவரும் அடிக்கடி விமானம் மூலம் வெளிநாட்டில் இருந்து பொருள்களை கொண்டு வந்து இலங்கையில் விற்பனை செய்யும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இருவரும் டுபாயிலிருந்து கல்ஃப் எயார் விமானத்தில் நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

227 சிகரெட் கார்ட்டூன்களை பயணப் பொதியில் மறைத்து வைத்திருந்த போதே சுங்க அதிகாரிகள் அவற்றை மீட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட சிகரெட்டுகள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டு, ஆண் நபருக்கு ஒரு லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் பெண் கடுமையாக எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளார் என்று சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



# நலிவடைந்தவர்களது தேவையறிந்து உதவும் கரங்களைப் பலப்படுத்துவோம்

## உதவி வழங்கல் நிகழ்வில் சிறீதரன் எம்.பி.

நலிந்தோரைத் நாடிச் சென்று, அவர்களது தேவையறிந்து சேவை செய்வோர் எமக்குத் தேவை. அவ்வாறானவர்களது கரங்களை நாம் பலப்படுத்துவோம். செந்தில்குமரனின் பணி என்றென்றும் தொடர்வதற்கு, எல்லோரும் இணைந்து அவரது கரங்களைப் பலப்படுத்துவோம்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரன் தெரிவித்துள்ளார்.

வாழ்வாதார வழிகளற்று, மிகக்கூடிய இடர்பாடுகளுள் வாழ்ந்துவரும் மூன்று சிறுநீரக நோயாளிகள் உள்ளிட்ட நான்கு குடும்பங்களுக்கு, கனடா வாழ் செந்தில்குமரன் நிவாரண நிதியத்தின் ஊடாக அண்மையில் நிதியுதவி வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

இந்த உதவி வழங்கல் நிகழ்வை அடுத்துக் கருத்துத் தெரிவித்த போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

புலம்பெயர் தேசத்தில் வாழ்கின்ற போதும், எமது மக்களின் நலனோம்புகையில் உயர் கரிசனை கொண்ட செந்தில்குமரனின் ஏற்பாட்டில், ஆடி அமாவாசை தினத்தன்று, கனடா கந்தசுவாமி ஆலயத்தில், செந்தில்குமரன் நிவாரண நிதியத்தால் சேகரிக்கப்பட்ட நிதி பொருண்மியம் நலிவுற்ற நிலையிலுள்ள மூன்று சிறுநீரக நோயாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவகுமார் என்பவருக்கு எண்ணெய் ஊற்றும் இயந்திரக் கொள்வனவுக்காக மூன்று லட்சத்து இருபதாயிரம் ரூபாவும், நாகன் ஸ்ரீபதம ராசா என்பவருக்கு மா அரைக்கும் இயந்திரக் கொள்வனவுக்காக இரண்டு லட்சத்து ஐம்பத்தையாயிரம் ரூபாவும், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி. தர்சினி இராசரத்தினம் என்பவருக்கு மருத்துவத் தேவை கருதி மூன்று லட்சத்து அறுபத்தெட்டாயிரம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

இவைதவிர, வட்டக்கச்சி, கிளிநொச்சியைச் சேர்ந்த ஏழு வயதுச் சிறுமியான செல்வி.விஜிதா மோகனதாசின் நோய் நிலைமையைக் கருதி அவரது குடும்பத்தினருக்கு, கறவைப் பசு மாடு கொள்வனவு, மாட்டுக் கொட்டகை அமைத்தல் என்பவற்றுக்காக இரண்டு லட்சத்து அறுபதாயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

தமிழர் தாயகமெங்கும் உள்ள வைத்திய நிபுணர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி, சரியான நோயாளிகளை இனம் கண்டு பல கோடி ரூபா செலவில் நூற்றுக்கும் மேற்பட்ட இதய சத்திர சிகிச்சைகள், சிறுநீரக நோயாளிகளுக்கான இரத்த சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல் மற்றும் வாழ்வாதார உதவித் திட்டங்கள், புற்றுநோய் உள்ளிட்ட சிகிச்சைகளுக்கான மருத்துவ உதவி, வைத்தியசாலைகளின் அடிப்படைக் கட்டுமானங்கள் என எல்லாவகை உதவித் திட்டங்களையும் வழங்கிவைக்கும் செந்தில்குமரன் போன்றோர் எமது மண்ணுக்கும் மக்களுக்கும் கிடைத்திருக்கும் பெரும் கொடை என்றே நான் கருதுகிறேன்.

இந்த அடிப்படையில் நலிந்தோரைத் நாடிச் சென்று, அவர்களது தேவையறிந்து சேவை செய்யும். செந்தில்குமரனின் பணி என்றென்றும் தொடர்வதற்கு, எல்லோரும் இணைந்து அவரது கரங்களைப் பலப்படுத்துவோம். – என்றார்.

முல்லைத்தீவு வைத்தியசாலையில், இவரது நிதி ஏற்பாட்டில் புதிதாக அமைக்கப்பட்ட இருதய நோய்ப் பிரிவு அண்மையில் இலங்கைக்கான கனேடிய தூதரால் திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.









## மதுபான சாலை அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து

# கொட்டும் மழையில் குடை பிடித்தவாறு மலையக மக்கள் முன்னணி போராட்டம்

(மஸ்கெலியா நிருபர் )

மலையக பகுதிகளில் அதிக மது பான சாலைகள் அமைப்பதற்கு எதிர்ப் புத் தெரிவித்து, கொட்டும் மழையிலும் நேற்று (18) மலையக மக்கள் முன்ன ணியினர் போராட்டத்தில் ஈடுபட் டனர். நேற்று மாலை குயில்வத்தையில் உள்ள செஸ்டா உணவக பகுதியில் கொட்டும் மழையில் போராட்டம் இடம்பெற்றது.

மலையக மக்கள் முன்னணி தலை வரும் நுவரெலியா மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினருமான வீ. ராதாகிருஸ்ணன்ஆலோசனைக்கமைய கட்சியினர் மதியம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.இந்தப் போராட்டம் தொடரும் எனக் கூறினார்.

இந்தப் போராட்டத்தில் மலையக மக்கள் முன்னணியின் மகளிர் அணி பிரதி தலைவியும் , அம்பகமுவ பிரதேச சபை முன்னாள் உறுப்பினருமான சுவர்ணலதா இலங்கேஸ்வரன் தலை மையில் போராட்டம் முன்னெடுக் கப்பட்டது.

இந்தப் பகுதி, பாடசாலை, ஆலயம் மற்றும் அதிகமாக பொது மக்கள் நட மாடும் இடம் என்பதால் மதுபான சாலையை திறக்கப்படும் பட்சத்தில் அங்கு தற்போது உள்ள அனைத்து அமைதியும் பறிபோய் விடும் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

எனவே இந்தப் பகுதியில் மதுபான சாலையை முன்னெடுக்க விடமாட்டோம். இதற்கு சரியான தீர்வு கிடைக்காவிட்டால் மிகப்பெரிய போராட்டம் முன்னெடுக்கப் படும் என்று போராட்டத்தின் போது மலையக மக்கள் முன்னணியின் மக ளிர் அணி பிரதி தலைவி சுவர்ணலதா இலங்கேஸ்வரன் தெரிவித்தார்.





# மன்னாரில் சத்சங்கம்!

(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கை ராமகிருஷ்ண மிஷனின் சத்சங்கம் மன்னார் நகரில் நடை பெற்றது.

ராமகிருஷ்ண மிஷனின் மட்டக் களப்பு கிளை பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் அங்கு சத்சங்கத்தை நிகழ்த் தினார்.

மன்னார் செம்மண்தீவுக் கிராமத்தில் நடைபேற்ற சிறப்பான சத்சங்க கூட்டத்தில் மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் சுவாமி நீலமாதவானந்தர் மகராஜ்ஜிற்கு பலத்த வரவேற்பும் கௌரவமும் அளிக்கப் பட்டது.

திருக்கேதீஸ்வரம் தர்மபுரி ஆதீன முதல்வர் சுவாமிகளை வரவேற்றார். பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.



# சமுர்த்தி வங்கிக்கு நிரந்தரக் காணி

**(நூருல் ஹுதா உமர், சர்ஜுன் லாபீர்)**

கல்முனை பிரதேச நற்பிட்டிமுனை சமுர்த்தி வங்கிக்கான நிரந்தர காணிக்கு உறுதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த உறுதி நிகழ்வு நேற்று (18) கல்முனை பிரதேச செயலாளர் ஜே. லியாக்கத் அலி தலைமையில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த உறுதிப் பத்திரம் வழங்கும் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவரும், முன்னாள் இராஜங்க அமைச்சருமான நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் கலந்து கொண்டார்.

பிரதேச செயலக கணக்காளர் கே.எம்.ஏ அமீர் அலி, சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.ஆர். எம். சாலீஹ், முன்னாள் மாநகர சபை உறுப்பினரும், விரிவுரையாளருமான எம்.ஏ. கலீலூர் ரஹ்மான், கல்முனை சமுர்த்தி மகா சங்க முகாமையாளர் எம்.என் நௌஸாத், நற்பிட்டிமுனை சமுர்த்தி வங்கி முகாமையாளர் ஏ.எம் பைசால், உதவி முகாமையாளர் யூ.எல் தௌபீக் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# கனடாவில் காரைதீவு பேராசிரியருக்கு பாராட்டு

**(வி.ரி.சகாதேவராஜா)**



கனடா சுவாமி விபுலானந்தர் கலை மன்றம், கனடாவில் வாழும் காரைதீவைச் சேர்ந்த பேராசிரியர் முனைவர் இளைய தம்பி பாலசுந்தரத்துக்கு பாராட்டு விழா ஒன்றை நேற்று முன்தினம் (17) ஞாயிற்றுக்கிழமை நடத்தியது.

கனடா சுவாமி விபுலானந்தர் கலை மன்றத்துடன் அண்ணாமலை பல்கலைக்கழக கனடா வளாகம், கனடா கவிஞர் கழகம், கனடா தொல்காப்பியர் மன்றம் இணைந்து விழாவை ஏற்பாடு செய்தது.

கனடா சுவாமி விபுலானந்தர் கலை மன்ற தலைவர் எல். புருசோத்தமன் தலைமையில், விழாக்குழுத்தலைவர் எழுத்தாளர் கல்வியியலாளர் க. குமரகுரு ஒருங்கிணைப்பில் நிகழ்வு நடைபெற்றது.

கனடாவில் வாழும் காரைதீவைச் சேர்ந்த பிரபல சமூக செயற்பாட்டாளர் வைத்திய கலாநிதி டாக்டர் அ.வரதராசன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

"செந்தமிழ் பேரொளி" என்ற சிறப்பு பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

# சினத்தின் சீற்றம்...!

மனிதனுடைய உணர்வு என்பது பலதரப்பட்டது. அது ஒவ்வொரு நேரங் களிலும் ஒவ்வொரு கோணத்துக்கு மாற்றமடைய கூடியது.

இவ்வாறான உணர்வுகளில் மிகப் பிரதானமான கோபம் என்பது ஒரு ஆக்கிரமிப்பு உணர்ச்சியாக நம் அறிவிலும், உடலிலும், நடத்தையிலும் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியது. ஒரு மனிதன் தன்னை அச்சுறுத்தும் வேறு ஒரு வெளி சக்தியை எதிர்த்து எடுக்கும் முடிவே மூளையின் தேர்வான கோபம். கோபத்தின் வெளிப்பாடுகளை முக பாவனைகள் உடல் மொழி மூர்க்கத்த னமான நடவடிக்கைகள் ஆகியவற்றால் கண்டறியலாம்.

இந்த வகையான ஆத்திரத்திலி ருந்து பிறக்கும் பல தீய குணங்கள் வன்செயல், வெட்டுக்குத்து, அவ தூறு, தீய எண்ணங்கள், வருத்தம், பொறாமை, லஞ்சம், சூழ்ச்சி, பொருள் களை அழித்தல் என ஒரு விதமான ஆக்ரோஷத்தை உருவாக்கி விடு கின்றது. கோபம் என்பது தன்னையே அழித்துவிடும். ‘ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு’ என்பதற்கு அமைய ஒரு மனிதனின் வெற்றிக்கு தடையாக இருப்பதில் மிக முக்கியமானது கோபம் தான். கோபத்தால் தனது சிந்தனை, கவனம் போன்றன சிதறடிக்கப்பட்டுச் செய்ய வேண்டிய செயல்கள் இதனால் நமக்கு மட்டுமல்லாது நம்மை சுற்றி உள்ளவர்களையும் பாதிக்கச் செய் கின்றது. மகிழ்ச்சியை பறித்து விடு கின்றது. திருமண பந்தத்தை அழித்து விடுகின்றது. தொழிலை முடக்கிவிடும். கோபத்தால் தொடர்புகளை அழித்துக் கொண்டால் தொழில் ஏது? அது மட் டுமல்லாது மன இறுக்கத்தை அதிக ரித்து இருதய வியாதிக்கு வழி வகுக் கின்றது. கோபம் ஆண்களுக்கு மிக விரைவாகவும் பெண்களுக்கு சிறிது நிதானமாகவும் படிப்படியாக ஏற்படுவதா கவும் அறிவியல் முடிவுகள் கூறுகின் றன.

குடிகாரன் வெகுவிரைவில் மனை வியை கை நீட்டுவதை கொண்டும் சமையலறையில் இருந்து சற்று நேரம் சென்று பூரிக்கட்டை பறந்து வருவதைக் கொண்டும் இதை அறியலாம். 55 வயதுக்கு கீழே உள்ளவர்கள் கோபப் படும் போது அவர்கள் மாரடைப்பு உள்ளிட்ட இருதய வியாதிகளால் உயிரிழப்பதற்கான வாய்ப்பு மூன்று மடங்கு அதிகமாகவும் இதுவே 55 வயதுக்கு கூடுதலாக இருந்தால் உயிரிழப்பு ஆபத்து ஆறு மடங்காக அமையவும் வாய்ப்பு உள்ளது எனவும் அறிவியல் குறிப்பிடுகின்றது.

கோபம் ஒரு கொடிய மிருகம். அது வளர்ப்பவர்களையே அழிக்கும். கோபமும் புயல் போன்றது தான். அது அடங்கிய பின்தான் தெரியும். அதனால் அடைந்த நஷ்டம் எவ்வளவு என்று. மந்தரை எனும் கூனிக்கு ராமன் மீது ஏற்பட்ட கோபம், கைகேயி மூலமாக ராமன், லட்சுமணன், சீதை மூவரும் வனவாசம் அனுப்பியது, பாஞ்சாலியின் துகில் உரிந்தது கௌரவர்கள் மூலம் மகாபாரதப் போராக்கியது என பல பிரச்சனைக்கு ஆரம்ப புள்ளி கோபம் என்றால் அது மிகையாகாது. கோபத் தால் கொலை செய்து தண்டனை பெற்று சிறையில் அடைக்கப்பட்டவர் பலர்.



“தன்னைத்தான் காக்கின் சினம் காக்க காலாக்கால் தன்னையே கொல்லும் சினம்” என்ற திருக்குறளின் பொருளை நோக்குகையில் தன்னை காக்க வேண்டும் என்றால் கோபம் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும் இல்லை என்றால் அது கோபம் கொள்பவரையை கொன்றுவிடும். இப்படிப்பட்ட பல ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய இக்கோபம் எதனால் உருவாகின்றது என்ற வினாவுக்கு விடையை தேட வேண்டும் என்ற ஆர் வத்தில் உளவியலாளரான சுல்தான் ஜென்சீர் என்பவரிடம் இவ் வினாவைத் தொடுத்த போது,

பரிணாம ரீதியாக இரண்டு காரணங்களால் கோபம் உருவாகின்றது என்று அவர் தெரிவித்தார். அதாவது கோபம் என்பது ஒரு விலங்கு தன்னை எதிரிகளிடம இருந்து தற்காத்துக் கொள்ளவும் இறை தேடல் இணைத் தேடல் போன்ற விடயங்கள் தனக்கு போட்டியாக வருபவர்களை பயமுறுத்தி விரட்டவும் ஒருவரது நடவடிக்கை பிடிக்கவில்லை அல்லது எதிர்பார்த்த ஒன்று நடக்கவில்லை என்றால் அவரை நமது வழிக்கு கொண்டுவர உதவும் ஒரு நடவடிக்கை எனவும் குறிப்பிட்டார்.

மேலும் எல்லா கோபத்தின் பின் னாலும் ஒரு ஏமாற்றம் உள்ளது. கோபத் தின் போது மூளையில் வேதியியல் மாற்றங்கள் ஏற்படுகின்றன. கோபம் அதிகம் வரும்போது உணர்வு பூர்வ மான நிலையில் அறிவு பூர்வமாக யோசிக்கும் திறன் வெகுவாக குறைந்து விடுகிறது.

கோபத்தை குறைப்பதற்கும் அடுத்து என்ன செய்யலாம் என அறிவுபூர்வமாக யோசிப்பதற்கும் மூளையில் சில பகுதிகள் உள்ளன. மன அழுத்தம், விபத்து, மது போன்றவை அப்பகுதி யைப் பாதிக்கின்றன. அதனால் சிறுவிடயங்களை கூட கட்டுப்படுத்த முடியாமல் கடும் கோபம் உருவாகின் றது. இதன் போது உடலில் ரத்த அழுத் தம் அதிகரித்தல், வேகமான இதயத் துடிப்பு, இரத்தக் கொதிப்பு என பல மாற்றங்கள் ஏற்படுகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

எனவே கோபம் என்பது கொடியது என்றாலும் கோபப்படுவது முழுமையாக தவறு என கூற முடியாது. நியாயமான காரணங்களுக்காக சரியான முறையில் கோபம் கொள்வது தவறல்ல. ஆனால் அளவுக்கு அதிகமான கோபம் எமது உடலில இதய நோய், மன அழுத்தம், இரத்த அழுத்தம், சுவாசக் கோளாறு மற்றும் உறக்கமின்மை என பல கோளாறுகளையும் விளைவிக்கின்றது.

அதாவது, அதிகமாகக் கோபம் வருவதால், மன அழுத்தம் அதிகமாகி அதன் காரணமாக நீரிழிவு, மன இறுக்கம், இரத்த அழுத்தம் போன்ற பிரச்சனைகள் வருகின்றன.

கோபம் வரும்போது வரும் படபடப்பு தன்மை இதய துடிப்பை அதிகப்படுத்தி இதயத்துக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தி ஆபத்தான விளைவுகளில் முடிகிறது.

கோபம் வரும்போது ஹார்மோன்கள் சுறுசுறுப்பாக இருக்கும். இதனால் சரியான தூக்கமின்மை, ஓய்வில்லா மையால் நோய்கள் எளிதாக தாக்கு கிறது.

கோபம் வரும் போது உடலில் ரத்த அழுத்தமானது உடனடியாக அதிகப் படியான அளவில் அதிகரிக்கும். அவ் வாறு உடனே அதிகரிக்கும் போது,

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சினத்தின் சீற்றம்...!



(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதயமானது பெரும் அளவில் பாதிக் கப்படுகிறது.சுவாசக்கோளாறு ஆஸ்து மாவால் பாதிக்கப்பட்டவர்கள் கோபப் படும் போது சரியாக சுவாசிக்க முடியாது. அதனால் ஆஸ்துமா உள்ளவர்கள் அதிகம் கோபப்பட கூடாது. இல்லை யெனில் அது மூச்சடைப்பை ஏற்படுத்தி உயிருக்கே ஆபத்தை ஏற்படுத்தும்.

பெரும்பாலானோர் கோபத்தின் காரணமாகத் தான் மாரடைப்பால் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவேதான் இதய நோயாளிகளிடம் எந்த ஒரு அதிகப்படியான மகிழ்ச்சியான விஷ யத்தையும் அல்லது அவர்களை கோபமூட்டும் விஷயத்தையும் சொல்ல வேண்டாம் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

மூளை வாத நோய் ஏற்படுவதற்கு மூளையில் உள்ள இரத்தக் குழாய்கள் வெடிப்பதுதான் காரணம். இந்த மாதி ரியான இரத்தக் குழாய்கள் வெடிப்ப தற்கு முக்கிய காரணம் கோபம். ஏனெ னில் கோபத்தினால் இரத்த அழுத்த மானது அதிகப்படியாக இருப்பதால் அவை இரத்தக் குழாய்களை சில சமயங்களில் வெடிக்கச் செய்து உயிரைப் பறித்து விடும். எனவே எப்போதும் அதிகப்படி யான கோபம் கொள்ளக் கூடாது எனவும் மருத்து வர்கள் கூறுகின்றனர்.

இப்படி கோபம் என்பது எமது உடலினுள்ளும் பல தாக்கங்களை உருவாக்குகின்றது. எனவே கோபம் என்பது முழுமையாக கொடியது. இல்லாவிட்டாலும் அதிகப்படியான கோபம் எமக்குள் பல பாதிப்புகளை ஏற்படுத்திவிட்டுதான் செல்கிறது.

எனவே கோபம் வருவதை முடிந் தளவு குறைத்துக் கொள்வதோடு கோபத்தை உருவாக்கக் கூடிய இடங்களில் இருந்து சற்று வெளியேறி செல்வது கோபத்தை ஓரளவேனும் தனிப்பதற்கு வழி வகுக்கலாம். ஆகவே நமது வாழ்க்கை என்பது ஒருமுறைதான் வரும் அதில் கோபத்துக்கு முக்கியத் துவம் கொடுத்து வாழ்க்கையை இழந்து விடுவதை விட வாழ்க்கையின் அனுப வத்தையும் வாழ்க்கையின் பாடத்தை யும் உணர்ந்து வாழ்வில் வெற்றிக்கான பாதைகளை நோக்கி முயற்சி செய் வோம்.

**கணேஸ்குமார் மதியந்தி,**
ஊடக கற்கைகள் துறை,
இரண்டாம் வருடம்,
யாழ். பல்கலைக் கழகம்.

# 2023 இல் நேற்றுவரை 75 துப்பாக்கிச் சூடுகள்!

## 42 பேர் உயிரிழப்பு!!

நாடு முழுவதும் இந்த வருடம் ஆரம்பம் முதல் நேற்றுத் திங்கட்கிழமை (18) வரையான காலப் பகுதியில் 75 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகி யுள்ளன. இதன்போது 42 பேர் உயிரி ழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தி யட்சகர் நிஹால் தல்துவ தெரி வித்தார்.

துப்பாக்கிப் பிரயோக சம்பவங்களில் காயமடைந்த 33 பேர் மருத்துவமனைக ளில் சேர்க்கப்பட்டனர் என்று அவர் கூறினார்.

இந்த வருடத்தின் முதல் சில மாதங்க ளில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு பயன்படுத்தப் பட்ட வாகனங்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர் என்று அவர் மேலும் கூறியுள்ளார்.




# பைத்துல் மால் நிதியத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

பைத்துல் மால் நிதியத்தின் 66 ஆவது வருடாந்த மாநாடு அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.

இதன்போது நிதியத்தின் 2023 – 2024 ஆம் ஆண்டுக்கான நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் – ஜனாதிபதி சட்டத்தரணி ஏ.ஏ.எம்.இல்யாஸ், உப தலைவர் – எம்.எஸ். பௌசுல் ஹக், செயலாளர் – ஏ.என். நஸ்வி ரஹ்மான், பொருளாளர் – ஏ. பெரோஸ் மூன், உதவிச் செயலாளர் – எப்.எம். அஸாப் கான், மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் எஸ்.ஆர். ரழீம், எம்.ஏ.எம்.நஸ்ரின், ஏ. பஸால் இஸ்ஸடீன், எம். றுஸ்தி தஹ்லான், எப். ஐ. அன்வர், டாக்டர் எம்.ஏ. ஸெ ய்னுடீன், எம்.எச்.எம்.நஸார், முகைதீன் காதர், சர்ஹான் மூஷீன், மிஃராஜ் டீ சாலி, சுரைஸா ஹாஷிம், றுமைஸ் முஹைதீன், இஷாக் ஹனீபா.

57 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் முதலாவது முஸ்லிம் சபாநாயகரான எச்.எஸ். இஸ்மாயிலின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டு பின் நாடாளுமன்றத்தில் கூட்டிணைக்கப்பட்ட ஓர் அமைப்பே பைத்துல் மால் நிதியமாகும்.

பைத்துல் மால் நிதியம் கல்வி, தொழில் முயற்சி, பொது நிவாரணம் ஆகிய துறைகளிலும் உதவிகளை வழங்கி வருகின்றது.



# மாணவர்கள் காலை உணவை கட்டாயம் உட்கொள்ள வேண்டும்

## கல்முனை சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

**(றியாஸ் ஆதம்)**

பாடசாலை மாணவர்கள் காலை உணவை கட்டாயமாக உட்கொண்டே பாடசாலைக்கு சமூகமளிக்க வேண்டும். அதிலும் குறிப்பாக போசாக்கான உணவுகளையே உண்ணப் பழகிக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் தெரிவித்தார்.

சாய்ந்தமருது மழ்ஹறுஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயத்தில் நேற்று திங்கட்கிழமை (18) இடம்பெற்ற காலை ஆராதனை நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கன்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

இயற்கையானதும், போசாக்கானதுமான உணவுகளை விட்டு பொருத்தமற்ற உணவுகளையே நாம் உண்ணத்தொடங்கியுள்ளோம். இப்போது பெண்கள் வீடுகளில் சமைப்பதைக் குறைத்து வருகின்றனர்.

தொழில் செய்யக் கூடிய பெண்கள் அதனை சிரமம் என்று பார்க்கின்றனர். என்றாலும் ஒரு வீட்டின் ஆரம்பம் சமலறைதான். குறிப்பாக பெண்கள் சமையலை ஒரு அடிமைத்தனமாக நினைக்கக் கூடாது சமையல்தான் ஒரு வீட்டின் மிக முக்கியமான விடயமாகும்.

கல்வியைப் பொருத்த வரையில் நமக்கு தெரிந்த விடயத்தை ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் எமது அறிவு விருத்தியடையும். எமக்குத் தெரிந்த விடயங்களை இரகசியமாக பேணிக் கொள்ளாது ஏனையவர்களுக்கும் சொல்லிக் கொடுக்க மாணவர்கள் பழகிக்கொள்ள வேண்டும்.– என்றார்.

பாடசாலை அதிபர் எம்.சீ.என்.றிப்கா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதி அதிபர்களான எஸ்.முபாரக், எம்.எப்.ஐ.மர்சூனா உள்ளிட்ட ஆசிரியர்கள் பலரும் கலந்துகொண்டனர்.



# மரக் கன்றுகள் வழங்கல்

**(எம்.நவாஸ்)**

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் அதன் உதவி பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஹிஜா முஸாபிரினால் பாலமுனை அரச ஹோமியோபதி வைத்திய நிலையத்துக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

நேற்று (18) இடம்பெற்ற இந்த நிகழ்வில் உதவித் திட்டப் பணிப்பாளர் ஏ.எல்.மஜீத் மற்றும் செயலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.



# சாய்ந்தமருது பிரதேசக் கடலரிப்பை கட்டுப்படுத்துவது தொடர்பில் ஆய்வு



(நூருல் ஹுதா உமர் )

கடந்த சில வாரங்களாக அகோரமாக கடலரிப்பை சந்தித்துள்ள சாய்ந்தமருது பிரதேசத்தின் மீனவ வாடிகள், பள்ளி வாசல், பூங்காக்கள் என்பன கடலரிப்பில் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளன. மீன்பிடி நடவடிக்கையும் வெகுவாக பாதிப்படைந் துள்ளது. மீனவர்கள் வீதியில் இறங்கிப் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

இதனால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக் கும் உயர் மட்ட பிரமுகர்கள், அதிகாரிக ளுக்குமிடையிலான கலந்துரையாடல் நேற்று (18) மாலை சாய்ந்தமருது அல்-ஹசனாத் பள்ளிவாசலில் இடம்பெற்றது.

அதிக மீன் உற்பத்தியை கொண்ட இந்தப் பிரதேச மீனவர்களின் பிரச்சி னைகளை கள விஜயம் மேற்கொண்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவரும், முன்னாள் இராஜங்க அமைச்சருமான எச்.எம்.எம். ஹரீஸ் கேட்டறிந்தார்.

மேலதிக நடவடிக்கை எடுக்கும் வகையில் சாய்ந்தமருது பிரதேச செய லாளருக்கு முன்வைத்த பணிப்புரைக்கு அமைவாக நடைபெற்ற இந்த கலந்துரை யாடலில் கரையோரம் பேணல் திணைக் கள கிழக்கு மாகாண பொறியியலாளர் எம். துளசி தாசன் கலந்து கொண்டு கரையோரம் பேணல் திணைக்களம் இவ் விடயம் தொடர்பில் இதுவரை முன்னெடுத்துள்ள வேலைதிட்டங்கள் தொடர்பிலும், எதிர்காலத்தில் முன்னெ டுக்க வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் சபைக்கு விளக்கி னார்.

கலந்துரையாடலின் போது துரித கதியில் இந்தப் பணியை முன்னெடுக்க தேவையான விடயங்கள் தொடர்பில் சபையோரால் ஆழமாக ஆராயப்பட்டது. இப்பணியை முன்னெடுக்க தேவையான நிதியை பெறுவது தொடர்பிலும், திட்ட வரைபை வரைவது தொடர்பிலும் கலந்து ரையாடி நிலையான தீர்மானங்களை எடுக்க தேவையான நடவடிக்கையை நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் அரச உயர் மட்டங்களை தொடர்பு கொண்டு எடுத்தார்.

இந்தப் பிரச்சினைக்கு ஒரு குழுவாக இணைந்து செயற்பட்டு தீர்வைக் காண வேண்டும் என்று இந்த கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

# வீட்டுத் தோட்டம் அமைக்க ஊக்குவிப்புக் கொடுப்பனவு

(அ.அஸ்வர்)

ஏறாவூர்பற்று செங்கலடி பிரதேச செயலகத்தில் வீட்டுத் தோட்டங்களை அமைப்பதை ஊக்குவிப்பதற்காக முதற்கட்ட உதவித் தொகைகள் வழங்கப் பட்டுள்ளன.

இவற்றைக் கையளிக்கும் நிகழ்வு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று (18) இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் கோ.தனபால சுந்தரம் தலைமையில் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஆ.சுதாகரன் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் வீட்டுத் தோட் டங்களை அமைப்பதற்குப் பிரதேச மக்களை ஊக்குவிக்கும் முதல் கட்ட உதவித் தொகையாக ஒருவருக்கு தலா 3 ஆயிரத்தி 500 ரூபா பெறுமதியான காசோலைகள் பயனாளிகளிடம் கைய ளிக்கப்பட்டன.




இந்த நிகழ்வு பொது மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக நாடளாவிய ரீதியில் பல்வேறு நிதியுத விகளை வழங்கிவரும் பெரெண்டினா நுண்நிதி அரச சார்பற்ற நிறுவனத்தின் நிதி அனுசரணையில் நடைபெற்றது.

இதன்மூலம் இதுவரை ஆயிரத்தி 687 பயனாளிகள் செங்கலடி பிரதேசத் தில் இவ்வாறான வாழ்வாதார உதவி களைப் பெற்றுள்ளனர்.

இதன்போது பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் , பெரெண்டினா நுண்நிதி நிறுவனத்தின் முகாமையாளர் எஸ். செந்தூரன், பிரதேச முகாமையாளர் பா.பிரதிலீபன் உட்பட நிறுவனத்தில் ஊழியர்கள் மற்றும் பயனாளிகள் கலந்து கொண் டனர்.




# சமாதான பாலர் பாடசாலை விளையாட்டும் பரிசளிப்பும்

**(எம்.எம்.றம்ஸீன்)**

கல்முனையில் சுமார் 31 வருடங்களாக இயங்கி வரும் சமாதான பாலர் பாடசாலையால் சிறுவர்களுக்கான விளையாட்டுப்போட்டி ஒன்று சமாதான பாலர் பாடசாலையின் பணிப்பாளர் திருமதி. எம்.எச்.ஹிஜ்ரா தலைமையில் கல்முனை அல்-பஹ்றியா தேசிய பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வரும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளருமான ரஹ்மத் மன்சூர் கலந்து கொண்டார். கல்முனை அல்-பஹ்றியா தேசிய பாடசாலையின் அதிபர் எம்.எஸ். எம்.பைசல், பிரதி அதிபர் திருமதி. ஈ.றினோஸ் ஹஜ்மீர், விளையாட்டு ஆசிரியர் எம்.எம்.றியால், அல்-பஹ்றியா பழைய பெண்கள் அமைப்பின் செயலாளரும் ஆசிரியையுமான திருமதி. எம்.எம்.நஜீனா லாபீர், நைட்டா போதனாசிரியர் பொறுப்பாளர் எம்.ரீ.அஸ்கர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# மாகாண ஆங்கில தின போட்டியில் இரண்டாமிடம்

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

பாடசாலைகளுக்கு இடையேயான கிழக்கு மாகாண மட்டத்தில் இடம்பெற்ற தரம் 4 மாணவர்களுக்கான ஆங்கில கையெழுத்துப் போட்டி மட்டக்களப்பு கரடியனாறு மகா வித்தியாலத்தில் இடம்பெற்றது.

இந்தப் போட்டிகளில் கலந்துகொண்ட சாய்ந்தமருது அல் கமறூன் வித்தியாலய மாணவி எம்.ஆர்.எப்.அலீஷா மர்யம் மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை பெற்றுத் தந்துள்ளார்.

அதிபர் எம்.ஐ.நிபாயிஸ் வழிகாட்டலுடன் ஆசிரியைகளான திருமதி. வினோஸா அஹமட் ஸாபிர் மற்றும் திருமதி ஐ.எல்.எஸ்.றிஹானா ஆகியோரது நெறிப்படுத்தலுடனும் கல்முனை கல்வி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி இந்த மாணவி போட்டியில் பங்குபற்றியிருந்தார்.



# நடிகர் விஜய் ஆண்டனியின் மகள் மரணம்: விபரீத முடிவுக்கான காரணம் வெளியானது!





இசையமைப்பாளரும், நடிகருமான விஜய் ஆண்டனியின் மகள் விபரீத முடிவெடுத்து இன்று அதிகாலை தூக்கில் தொங்கி உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.

இந்த சம்பவம் திரையுலகில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நடிகர் விஜய் ஆண்டனிக்கு லாரா என்ற மகள் உள்ளார். லாரா பிளஸ் 2 பயின்று வருகிறார். விஜய் ஆண்டனி தன் குடும்பத்துடன் சென்னை டி.டி.கே சாலையில் உள்ள வீட்டில் வசித்து வருகிறார்.

இந்த நிலையில், இன்று அதிகாலை 3 மணியளவில் வீட்டில் உள்ள தனது அறையில் மின் விசிறியில் லாரா தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

காலை லாராவின் அறை கதவு வெகுநேரமாக திறக்காததால் கதவை திறந்துகொண்டு உள்ளே சென்று பார்த்த பெற்றோர் மகள் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக கிடந்ததை கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

தகவலறிந்த பொலிஸார் விரைந்து சென்று லாராவின் உடலை மீட்டு பிரேதபரிசோதனைக்காக மருத்துவ மனைக்கு கொண்டு சென்றனர். இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்த பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

முதற்கட்ட விசாரணையில் லாரா மிகுந்த மன அழுத்தத்தில் இருந்துள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

# இலங்கை கடற்படை துப்பாக்கிச் சூடு: இராமேஸ்வரம் மீனவர்கள் குற்றச்சாட்டு!



நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, இலங்கை கடற்படை துப்பாக்கிச் சூடு நடத்தி விரட்டியடித்துள்ளது என இராமேஸ்வரம் மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இராமேஸ்வரம் மீன்பிடி துறை முகத்தில் இருந்து நேற்று சுமார் 424 விசைப்படகுகளில் மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு சென்றனர்.

நேற்று மாலை தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையே இராமேஸ்வரம் மீனவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்துள்ளனர்.

அப்போது அந்த பகுதியில் 10 இற்கும் மேற்பட்ட அதி நவீன ரோந்து படகுகளில் சென்ற இலங்கை கடற்படையினர் மீனவர்களை எல்லை தாண்டி இலங்கை கடற்பரப்பிற்குள் மீன் பிடிப்பதாக ஒலி பெருக்கி மூலம் எச்சரித்துள்ளனர்.

இதனால் அந்த பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்கள் கைது நடவடிக்கைக்கு அஞ்சி நடுக்கடலில் நாலாபுறமும் சிதறி ஓடினர்.

இதையடுத்து இன்று காலை கச்சத்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருக்கும் போது, ரோந்து பணியில் இருந்த இலங்கை கடற்படையினர் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டு கைது செய்வதாக மிரட்டல் விடுத்துள்ளன என இலங்கை கடற்படை மீது இராமேஸ்வரம் மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இவ்வாறு நடுக்கடலில் மீனவர்களை மீன் பிடிக்க விடாமல் இலங்கை கடற்படை தொடர்ந்து விரட்டியதால் மீனவர்கள் மீன் பிடிக்க முடியாமல் கரை திரும்பியுள்ளனர்.

இதனால், படகு ஒன்றுக்கு சுமார் 70 ஆயிரம் ரூபா வரை நஷ்டத்துடன் இன்று காலை கரை திரும்பியுள்ளோம் என இராமேஸ்வரம் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஆதித்யா விண்கலத்தின் முக்கிய பயணம் ஆரம்பம்!



சூரியனை ஆய்வு செய்வதற்காக அனுப்பப்பட்ட ஆதித்யா எல் –01 விண்கலம், சூரியனின் எல் – 01 புள்ளியை நோக்கிய பயணத்தை இன்று ஆரம்பித்துள்ளது என இந்திய விண்வெளி ஆய்வு மையமான இஸ்ரோ அறிவித்துள்ளது.

இன்று அதிகாலை 2 மணியளவில் விண்கலத்தின் உயரம் 5 ஆவது முறையாக அதிகரிக்கப்பட்டுள்ளது என இஸ்ரோ குறிப்பிட்டுள்ளது.

சூரியனை ஆய்வு செய்வதற்காக கடந்த 2 ஆம் திகதி பி.எஸ்.எல்.வி. மூலம் ஆதித்யா எல்-1 விண்கலம் விண்ணில் ஏவப்பட்டது.

புவி சுற்றுப்பாதையில் தமது பயணத்தை தொடங்கிய விண்கலத்தின் உயரம் படிப்படியாக அதிகரிக்கப்பட்டிருந்தது.

இஸ்ரோ ஒரு பாதையில் உள்ள ஒரு பொருளை மற்றொரு வான உடல் அல்லது விண்வெளியில் உள்ள இடத்திற்கு வெற்றிகரமாக மாற்றுவது இது தொடர்ந்து ஐந்தாவது முறையாகும் என்று இஸ்ரோ அறிவித்துள்ளது.







# சூடான் நைல் எண்ணெய் நிறுவனத்தின் கோபுரம் உள்ளிட்ட கட்டடங்கள் தீக்கிரை

சூடான் தலைநகர் ஹார்ட்டூமில் அந்த நாட்டு இராணுவம் மற்றும் துணை இராணுவ படைகளுக்கு இடையே நடைபெற்ற உக்கிர மோதல்களைத் தொடர்ந்து, ஏராளமான கட்டடங்கள் தீக்கிரையாகியுள்ளன.

சூடான் தலைநகரின் அடையாளமாகத் திகழ்ந்த நைல் பெட்ரோலிய எண்ணெய் நிறுவனத்தின் வானுயர் கோபுரமும் இதில் அடங்குகின்றது.

இந்த சம்பவம் மிகவும் துயர் மிக்கது என அந்த கட்டடத்தின் வடிவமைப்பாளர் சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

சூடான் இராணுவம் மற்றும் துணை இராணுவப் படைகளுக்கு இடையே கடந்த ஏப்ரல் 15 ஆம் திகதி முதல் தொடர்ந்தும் மோதல் இடம்பெற்று வருகின்றது.

இந்தநிலையில் கார்ட்டூமில் வான் தாக்குதல்களும் தரைவழித் தாக்குதல்களும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சூடானில் இடம்பெற்று வரும் மோதலில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர் என ஐ.நா தெரிவித்துள்ளது.

# தைவான் எல்லையில் பறந்தன சீனாவின் போர் விமானங்கள்!

## - தீவிரமடையும் போர்ப்பதற்றம்



சீனாவுக்கு சொந்தமான 103 போர் விமானங்கள் தைவான் எல்லையில் பறந்துள்ளன.

இவற்றில் 40 விமானங்கள் இரு நாடுகளுக்கு இடையேயான எல்லையை தாண்டியுள்ளன என தைவான் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அதேபோல் 9 போர் கப்பல்களும் தைவானின் கடற்பகுதிக்கு அருகே நிறுத்தப்பட்டுள்ளன என கூறப்படுகின்றது.

இதன் காரணமாக இரு நாடுகளுக்குமிடையில் போர்ப்பதற்றம் மேலும் அதிகரித்துள்ளது. எனவே இவ்வாறான நடவடிக்கைகளை உடனடியாக கைவிடுமாறு தைவான் பாதுகாப்பு அமைச்சகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

# இத்தாலியில் நிலநடுக்கம்!

மத்திய இத்தாலியில் நிலநடுக்கம் பதிவாகியுள்ளது என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மத்திய இத்தாலி - புளோரன்ஸ் நகருக்கு வடக்கே 5.1 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் நேற்று அதிகாலை பதிவாகியுள்ளது. நிலநடுக்கம் காரணமாக அந்த பகுதியில் உள்ள பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. ரயில் சேவைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

# கனடாவில் இளைஞர் சுட்டுக்கொலை!

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவில் இந்திய வம்சாவளி இளைஞர் ஒவர் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளார்.

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில், கடந்த சனிக்கிழமை இந்த துப்பாக்கிச்சூடு சம்பவம் இடம் பெற்றுள்ளது. ககன்தீப் என்ற 29 வயது இளைஞரே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இதேவேளை, சம்பவம் இடம்பெற்ற இடத்திலிருந்து ஆறு கிலோ மீற்றர் தொலைவில், கார் ஒன்றும் எரிந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேலும் பிரிட்டிஷ் கொலம்பியாவின் ஒரு குறிப்பிட்ட பகுதியில், இதுபோன்ற குற்றச்செயலைச் செய்துவிட்டு, அந்த குற்றச்செயலில் பயன்படுத்தப்பட்ட வாகனத்தை தீவைத்து எரிக்கும் ஒரு கும்பல் உள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, ககன்தீப் கொலைக்கும் அந்த கும்பலுக்கும் தொடர்பு உள்ளதா என்பது குறித்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# மலாக்கா நீரிணைக்குள் நுழைந்தது சீன உளவுக் கப்பலான 'ஷி யான் 6'!

சீன உளவுக் கப்பலான 'ஷி யான் 6' ஐ கொழும்பில் நிறுத்துவதற்கு இலங்கை அனுமதித்துள்ளதா என்ற குழப்பங்கள் காணப்படும் நிலையில், அது தற்போது மலாக்கா நீரிணைக்குள் நுழைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 'ஷி யான் 6' கப்பல் கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட இலங்கை பாதுகாப்பு அமைச்சகம் அனுமதி அளித்துள்ளது என்று தகவல்கள் வெளியாகின.

எவ்வாறாயினும், இந்த கோரிக்கை இன்னும் பரிசீலனையில் இருப்பதாகவும், அதற்கான அனுமதி வழங்கப்படவில்லை என்றும் இலங்கை வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் "நேற்று மாலை வரை ஷி யான் 6 க்கு அமைச்சு அனுமதி வழங்கவில்லை" என்று இலங்கை வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் பிரியங்கா விக்கிரமசிங்க மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

80 நாள் ஆய்வுப் பணி மேற்கொள்வதற்கு வருகை தரும் இந்த உளவுக் கப்பல், ஆய்வுக்கான திகதிகள் மற்றும் பிரதேசங்கள் இன்னும் தெரிவு செய்யப்படவில்லை என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இலங்கையின் தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்துடன் இணைந்து இந்த உளவுக் கப்பல் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# போதைப் பாவனையைக் கட்டுப்படுத்த கரைதுறைப்பற்று மக்கள் நடவடிக்கை

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சிலாவத்தை கிராம அலுவலர் பிரிவில் அதிகரித்துவரும் போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்த கிராம அமைப்புக்கள் ஒன்று திரண்டு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

சிலாவத்தை கிராமத்தில் போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் விளைவுகள், பாதிப்புக்கள் தொடர்பில் சம்மந்தப்பட்ட தரப்புக்களின் நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை. இதை உணர்ந்த கிராம மக்கள் மற்றும் இளைஞர்கள் கிராம அலுவலர் தலைமையில் முல்லைத்தீவு தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அமரசிங்கவின் உதவியுடன் கிராமத்தில் சிவில் பாதுகாப்பு குழு ஒன்றை அமைத்துள்ளனர்.

கிராம அபிவிருத்தி சங்கம், மாதர் கிராம அபிவிருத்தி சங்கம், விளையாட்டு கழகம் உள்ளிட்ட கிராம மட்டத்தில் உள்ள அமைப்புக்கள் மற்றும் கிராம மக்கள் மற்றும் இளைஞர்களை உள்ளடக்கி சிவில் பாதுகாப்பு குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த சிவில் பாதுகாப்பு குழு தமது கிராமத்தில் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபடுவோரை இனங்கண்டு பொலிஸாருக்குத் தெரியப்படுத்தும். இதன் மூலம் அவர்களைக் கைது செய்ய முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சிலாவத்தை கிராமத்தின் தீர்த்தக்கரை பகுதியில் அதிகமாக கசிப்பு விற்பனை இடம்பெற்றுவருகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவர் அதிகளவான கசிப்புடன் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கிராம மக்கள் முன்னெடுத்துச் செல்லும் இந்த நடவடிக்கைக்கு பலரும் பாராட்டுக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேபோல் ஒவ்வொரு கிராமமும் தமது கிராமத்தில் போதைப் பொருள் பாவனையை தடுக்க முன்வந்தால் நாட்டில் போதைப்பொருள் பாவனையை ஒழிக்க முடியும் என சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

# கைகள், கால்கள் கட்டப்பட்ட நிலையில் குளத்தில் மிதந்தது இளைஞன் சடலம்!

ரத்கம மயானத்துக்கு பின்புறமாக உள்ள குளத்தில் கைகள், கால்கள் கட்டப்பட்ட நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் மிதந்த நிலையில் மீட்கப்பட்டது என்று ரத்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் ரத்கம கம்மெத்தேகொட பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய ஷெஹான் நிலங்க என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குளம் ஒன்றில் சடலம் மிதப்பதாக வந்த தகவலின் பேரில், நேற்று திங்கட்கிழமை (18) மாலை அங்கு சென்ற பொலிஸார் சடலத்தை கரைக்குக் கொண்டு வந்தனர்.

நீதிவான் விசாரணைகளின் பின்னர் சடலம் பிரேத பரிசோதனைக்காக கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.



# நாட்டில் புத்தி ஜீவிகள் வெளியேற்றம்: அரசு மௌனம் காப்பது எதற்காக?

## திஸ்ஸ அத்தநாயக்க கவலை

நாட்டிலிருந்து புத்தி ஜீவிகள் வெளியேறுகின்றமையானது சகல துறைகளிலும் பெரும் நெருக்கடிகளை தோற்றுவித்துள்ளது. இது தொடர்பில் அரசு மௌனம் காத்து வருகின்றது.

இதற்குச் சிறந்த உதாரணம் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் சேவையிலிருந்து 60 விமானிகள் விலகியுள்ளனர்.

விமானிகள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள் உள்ளிட்ட புத்தி ஜீவிகளின் வெளியேற்றத்தைத் தடுப்பதற்கு அரசு ஏன் எந்தவொரு நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை?

இவ்வாறு, ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க கவலை தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (18) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு தெரிவித்துள்ளவை வருமாறு–

வெளிநாட்டுக் கடன்களை தொடர்ந்தும் மீள செலுத்த முடியாது என்ற நிலைபாட்டிலேயே அரச் காணப்பட்டால் , சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து இரண்டாம் கட்டக் கடன் தொகையைப் பெற்றுக்கொள்ள முடியாது. கடனை மீளப் பெறுதல் மாத்திரமின்றி, சர்வதேசத்தின் மத்தியிலும் அங்கீகாரத்தைப் பெற முடியாத நிலைமை ஏற்படும்.

இதுவரையில் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளில் 30 சதவீதம் மாத்திரமே நிறைவேற்றப்பட்டுள்ளது. 70 சதவீதமான நிபந்தனைகளை நிறைவேற்றுவதில் அரசு தோல்வியடைந்துள்ளது.



இவற்றுக்கு மத்தியில் நாட்டிலிருந்து புத்தி ஜீவிகள் வெளியேறுகின்றமையானது சகல துறைகளிலும் பெரும் நெருக்கடிகளை தோற்றுவித்துள்ளது.

இதற்குச் சிறந்த உதாரணம் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் சேவையிலிருந்து 60 விமானிகள் விலகியுள்ளனர்.

விமானிகள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள் உள்ளிட்ட புத்தி ஜீவிகளின் வெளியேற்றத்தைத் தடுப்பதற்கு அரசு ஏன் எந்தவொரு நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை?

தற்போது முழு நாட்டினதும் பொருளாதாரம் பெரியளவில் சரிவை எதிர்கொண்டுள்ளது. இவை ஒரு புறமிருக்க மறுபுறம் குற்றச்செயல்களும் பெரியளவில் அதிகரித்துச் செல்கின்றன.

தற்போது நாட்டில் மாதமொன்றுக்குச் சுமார் 30 கொலைகள் இடம்பெறுகின்றன. இவ்வாறான பிரச்சினைகள் மாத்திரமன்றி கடந்த வருடத்தில் 3 ஆயிரத்து 406 பேர் தற்கொலை செய்துள்ளனர்.

பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் தரவுத் திணைக்களத்தின் ஆய்வொன்றில் இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு பிரதான காரணம் பொருளாதார நெருக்கடி எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சனல் 4 காணொளி விவகாரம் தொடர்பில் அதிபர் ரணில் விக்ரமசிங்கவின் தரப்பினரின் கருத்துக்கும், பாதுகாப்பு அமைச்சின் கருத்துக்கும் இடையில் பரஸ்பரம் காணப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சு இதனை முற்றாக நிராகரித்துள்ள போதிலும், ஜனாதிபதி தரப்பினர் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை கடும் விசனம் வெளியிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பில் இதற்கு முன்னர் 3 வழிமுறைகளில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ள விடயங்களையும் , சனல் 4 வெளியிட்டுள்ள விடயங்களையும் அடிப்படையாகக் கொண்டு சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

இதன் மூலம் உண்மையான குற்றவாளிகள் யார் என்பது வெளிப்படுத்தப்படும். – என்றார்.

## அச்சிடுவதில் ஏற்பட்ட குறைபாட்டால் பழுதடைந்த அடையாள அட்டைகள்

2022 ஆம் ஆண்டுக்கான ஆட்பதிவு திணைக்களத்தால் அச்சிடப்பட்ட தேசிய அடையாள அட்டைகளில் 04 வீதமானவை பழுதடைந்துள்ளன.

தேசிய கணக்காய்வு அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில், ஆட்பதத்திவு திணைக்களம் 6 லட்சத்து 28 ஆயிரத்து 973 தேசிய அடையாள அட்டைகளை அச்சிட்டுள்ளது.

இவற்றில், 22 ஆயிரத்து 407 பழுதடைந்துள்ளன எனறு கணக்காய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தவறான அடையாள அட்டைகள் பி.வி.சி. மற்றும் பாலிகார்பனேட் அட்டைகளில் அச்சிடப்பட்டுள்ளன. இந்த இரண்டு வகையான அட்டைகள் மூலம் அச்சிடப்பட்ட குறைபாடுள்ள அடையாள அட்டைகளின் எண்ணிக்கையை தனித்தனியாக வழங்க திணைக்களம் மறுத்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.இதன் காரணமாக, பழுதடைந்த அடையாள அட்டைகள் தொடர்பான எண்ணிக்கையை கணக்கிடுவதற்கான தகவல்கள் தணிக்கைக்கு சமர்ப்பிக்கப்படவில்லை என்று தணிக்கை அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## அரிய வகைப் பூனை உயிரிழந்த நிலையில்

புத்தளம் கொழும்பு பிரதான வீதியின் தில்லையடி பகுதியில் அரிய வகை மீன்பிடிப் பூனையொன்று நேற்று திங்கட்கிழமை (18) இரவு உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

இந்த மீன்பிடிப் பூனை களப்பில் இருந்த பிரதேசத்தை நோக்கி வீதியைக் கடக்க முற்பட்டபோது வாகனத்தில் மோதுண்டு உயிரிழந்திருக்கலாம் என்று பிரதேச வாசிகள் தெரிவித்தனர்.

அப்பகுதியில் களப்பு காணப்படுவதால் அதிக எண்ணிக்கையான மீன்பிடிப் பூனைகள் மீன்களை சாப்பிடுவதற்கு கரையோரங்களில் சஞ்சரிப்பது வழமை என்று பிரதேச வாசிகள் தெரிவித்தனர். கடந்த காலங்களிலும் குறித்த பகுதியில் இவ்வாறு வீதியைக் கடக்கும்போது வாகனங்களில் மோதுண்டு உயிரிழந்துள்ளன என்றும் பிரதேச வாசிகள் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்த மீன்பிடிப் பூனை சுமார் 3 அடி நீளமுடையது என்று தெரிவிக்கப்படுகின்றது.